Visit QB365-SLMS - https://www.qb365.in/slms/ Complete Questions and Answers

Questions:

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

1.தமிழ் விடு தூது ..... என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது.
(a) தொடர்நிலைச் செய்யுள் (b) புதுக்கவிதை (c) சிற்றிலக்கியம் (d) தனிப்பாடல்

2.விடுபட்ட இடத்திற்குப் பொருத்தமான விடை வரிசையைக் குறிப்பிடுக.
அ. .....இனம்
ஆ. வண்ணம் .....
இ. .....குணம்
ஈ. வனப்பு .....
(a) மூன்று, நூறு, பத்து, எட்டு (b) எட்டு, நூறு, பத்து, மூன்று (c) பத்து, நூறு, எட்டு, மூன்று (d) நூறு, பத்து, எட்டு, மூன்று

3.தூது _____ வகை சிற்றிலக்கியங்களுள் ஒன்று.
(a) அறுபது (b) தொண்ணூற்றாறு (c) அறுபத்தாறு (d) எழுபது

4.இயல், இசை _____ ஆகியன முத்தமிழாகும்.
(a) அறிவியல் (b) கவிதை (c) நாடகம் (d) பள்ளு

5.தாமசம் என்பதன் பொருள்
(a) தாமதம் (b) கோபம் (c) பொறுமை (d) சோம்பல்

6.தமிழ்விடுதூது _____ வகையால் எழுதப்பட்டது.
(a) குறள் வெண்பா (b) கலிவெண்பா (c) சிந்தியல் வெண்பா (d) பஃறொடை வெண்பா

7.வனப்பு என்பதன் பொருள்
(a) தணல் (b) அழகு (c) பொறுமை (d) பாதை

5 Marks

8.தூது அனுப்பத் தமிழே சிறந்தது என்பதற்குத் தமிழ்விடு தூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக.

9.நமது எண்ணங்களையும் கருத்துகளையும் எளிதாக எழுத்துரைக்க உதவுவது நமது தமிழ்மொழி என்ற தலைப்பில் ஒரு பக்க அளவில் உரை ஒன்றை எழுதுக

10.படித்துத் திரட்டுக.
"காதொளிரும் குண்டலமும் கைக்கு வளையாபதியும் கருணை மார்பின் மீதொளிர் சிந்தாமணியும் மெல்லிடையில் மேகலையும் சிலம்பார் இன்பப் போதொளிரும் திருவடியும் பொன்முடி சூளாமணியும் பொலியச் சூடி நீதியொளிர் செங்கோலாய்த் திருக்குறளைத் தாங்குதமிழ் நீடுவாழ்க" - கவியோகி சுத்தானந்த பாரதியார்.
இப்பாடல் காட்டும் இலக்கியங்களின் பெயர்களை வரிசைப்ப டுத்துக.

11.பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க
தித்திக்கும் தெள்அமுதாய்த் தெள்அமுதின் மேலான
முத்திக் கனியேஎன் முத்தமிழே - புத்திக்குள்
உண்ணப் படும்தேனே உன்னோடு உவந்துஉரைக்கும்
விண்ணப்பம் உண்டு விளம்பக்கேள்.
1. முத்திக்கனி -இலக்கணக்குறிப்பு தருக.
அ) உருவகம்
ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
இ) பண்புத்தொகை
ஈ) இரண்டாம் வேற்றுமைத்தொகை
2. விளம்பக்கேள் பொருள் தருக.
அ) சொல்வதைக் கேட்பாயாக
ஆ) கேட்பதை சொல்வாயாக
இ) விளம்புவதைச் சொல்
ஈ) படித்துப்பார்
3.உவந்துரைக்கும் - பிரித்து எழுதுக.
அ) உவந் + துரைக்கும்
ஆ) உவந்து + உரைக்கும்
இ) உவந் + உரைக்கும்
ஈ) உவந்து + துரைக்கும்
4. இப்பாடலில் இடம்பெற்றுள்ள அடி எதுகைச் சொற்களை எடுத்தெழுதுக.
அ) தித்திக்கும், தெள்அமுதாய்
ஆ) தித்திக்கும், உன்னோடு
இ) உண்ணப். விண்ணப்பம்
ஈ) விண்ணப்பம், விளம்ப

3 Marks

12.ஒன்பான் சுவைகள் யாவை? (அல்லது) நவரசம் என தமிழ்விடுதூது குறிப்பிடுவன யாவை?

13.தேவர்களை விட தமிழ் உயர்ந்தது -எவ்வாறு?